# PONDICHERRY UNIVERSITY
# PUBLIC RELATIONS WING

## NEWS PAPER CLIPPINGS

THE HINDU TAMIL DATED 19.04.2025

### புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்துடன் இணைந்து

# தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பை நிகழ்த்திய சாகித்ய அகாதெமி

**புதுச்சேரி**

சாகித்ய அகாதெமி மற்றும் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம் இணைந்து தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பை நடத்தியது. பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் சாகித்ய அகாதெமியின் செயலாளர் சீனிவாசராவ் வரவேற்புரையாற்றினார்.

பொதுக்குழு உறுப்பினர் பூபதி பெரியசாமி அறிமுக உரையாற்றினார்.

தென்னிந்திய சாகித்ய அகாதெமி ஒருங்கிணைப்பாளர் மிருணாளினி தலைமையுரையாற்றினார். பால் சாகித்ய புரஸ்கார் (தமிழ்) விருதாளர் மீனாட்சி சிறப்புரையாற்றினார்.

இதில், சாகித்ய அகாதமியின் பொதுக்குழு உறுப்பினர் பூபதி பெரியசாமி எழுதிய சிறார் சிறுகதை நூல் 'காட்டுத் தாத்தா' என்ற தலைப்பில் தமிழிலும் 'பாதர் ஆப் தி வுட்' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும், 'கிராந் பேர் டியூ புவா' தலைப்பில் பிரெஞ்சிலும் வெளியிடப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் பிரகாஷ் பாபு, இயக்குநர் தரணிக்கரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புலமுதன்மையர் சுடலைமுத்து நன்றி கூறினார்.



• சாகித்ய அகாதெமி மற்றும் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம் இணைந்து நடத்திய தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டோர்.

இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற நிகழ்வின் முதல் அமர்வில், சிறுகதை வாசிப்பு மற்றும் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், கன்னட மொழி எழுத்தாளர் சார்பில் சுஜாதா, மலையாள மொழி சார்பில் சபிதா, தமிழ் மொழி சார்பில் பால் சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற மீனாட்சி, தெலுங்கு மொழி சார்பில் பூர்ணிமா தம்மி ரெட்டி ஆகியோர் சிறுகதைகள் வாசித்தனர். இரண்டாம் அமர்வு கவிதை வாசிப்பு மற்றும் கலந்துரையாடலாக நடைபெற்றது. இதில் மலையாள எழுத்தாளர் கனிமோள் தலைமை தாங்கினார். லட்சுமி கன்னட மொழியிலும், கவிஞர் இளம்பிறை தமிழ் மொழியிலும், ஜவலிதா தெலுங்கு மொழியிலும் கவிதைகள் வாசித்தனர்.

நிறைவுவிழாவுக்கு இயக்குநர் கிளமெண்ட் லூர்து தலைமை தாங்கினார். துறைத் தலைவர் கருணாநிதி, நாவலாசிரியை அமிர்தவள்ளி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஆலோசனை குழு உறுப்பினர் முருகையன் நன்றி கூறினார்.

# மத்திய கல்வி அமைச்சரை புதுவை பல்கலை. துணை வேந்தர் சந்தித்தார்

**புதுச்சேரி**

புதுவை மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் பனிதி பிரகாஷ்பாபு டெல்லியில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை சந்தித்தார்.

இந்த சந்திப்பின்போது பல்கலைக்கழகம், இணைப்பு கல்லூரிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள கல்வி முன்னேற்றங்கள், பணிகள் குறித்து விவரித்தார்.

பல்கலைக்கழக எதிர்கால வளர்ச்சிக்கு தேவையான உதவிகள், வழிகாட்டுதல்களை மத்திய அரசு வழங்கி ஆதரவு அளிக்க வேண்டும் என மத்திய அமைச்சரிடம் கேட்டுக்கொண்டார். மேலும் புதுவைக்கு மத்திய அமைச்சர் வந்து, கல்வி திட்டங்களை பார்வையிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



• மத்திய கல்வி அமைச்சரை புதுவை மத்திய பல்கலைக்கழக துணை வேந்தர் சந்தித்தார்.